

வேலூர் மாவட்டம் கே. வி. குப்பம்வட்டம் கவசம்பட்டு கிராமத்தில் நீர்வளத்துறை சார்பில் பாலாற்றின்குறுக்கே ரூ.52.48 கோடி மதிப்பீட்டில் படுகைஅணை அமைக்க நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சியர்வே. இரா.சுப்புலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், ஊராட்சி ஒன்றியகுழு தலைவர்கள் லோ.ரவிச்சந்திரன், வேல்முருகன், வேலூர் மாநகராட்சி துணைமேயர் எம்.சுனில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க மதுரை எம்.ஜி.ஆர். பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை மண்டலம்) சார்பாக 39 புதிய பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, பத்தாண்டுகள் விபத்தின்றி பேருந்து இயக்கிய 10 ஓட்டுனர்களுக்கு 100 கிராம் வெள்ளி நாணயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் (மதுரை மண்டலம்) ஆ.ஆறுமுகம், மாநகராட்சி மண்டலத் தலைவர்கள் வாசுகி சசிக்குமார், புவனேஷ்வரி சரவணன், மாவட்ட அறங்காவல்குழு துணைத் தலைவர் வீரராகவன், முன்னாள் வாரிய தலைவர் அக்ரி கணேசன், தொ.மு.ச. மேலூர் அல்போன்ஸ் மற்றும் கழக நிர்வாகிகள், அதிகாரிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

### சி.பி.ஐ. ஒருதலைப் பட்சமாக செயல்படுகிறது!

# ஒரு தொழிலதிபர் விருப்பப்படி நடந்த தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு!

## சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் கருத்து!

சென்னை, ஜூலை 17 - தூத்துக்குடியில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடக் கோரி போராட்டம் நடைபெற்றது. அப்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் கொல்லப் பட்டது குறித்தும், காயங்கள் குறித்தும், பொது மற்றும் தனியார் சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் விசாரிப்பதற்காகச் சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது.

இந்த ஆணையம் அளித்த அறிக்கையின் மீது, தமிழக அமைச்சரவையில் விவாதிக்கப் பட்டு பல் வேறு நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கிடையே தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கை முடித்து வைத்து, தேசிய மனித உரிமை ஆணையம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என மனித உரிமை செயற்பாட்டாளர் ஹென்றி திபேன், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ். சுந்தர், செந்தில்குமார் அடங்கிய அமர்வில் ஏற்கெனவே விசாரணைக்கு வந்தது.

அப்போது, வழக்கில் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டிருந்த தூத்துக்குடி துணை காவல் கண்காணிப்பாளர் லிங்க திருமாறன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், “மனித உரிமை ஆணைய சட்டத்தின்படி ஏற்கனவே முடிக்கப்பட்ட வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியாது; மாநில மனித உரிமை ஆணையமும், நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையமும் விசாரித்த வழக்கை மீண்டும் விசாரிக்க முடியாது” என்று வாதிட்டார்.

இந்த வாதத்தை மறுத்த மனுதாரர் ஹென்றி திபேன், “மனித உரிமை ஆணைய சட்டப்படி மனித உரிமை ஆணையங்கள் பிறப்பிக்கும் உத்தரவை மறு ஆய்வு செய்ய முடியும். அந்த வகையில் தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பான வழக்கை மீண்டும் விசாரிக்க எந்த தடையும் இல்லை” என்றார்.

சி.பி.ஐ. தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், “துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பான வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் கூடுதல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் விசாரிக்கும் என்று மனுதாரர் மனு தாக்கல் செய்ய எந்த அடிப்படை முகாந்திரமும் இல்லை” என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், “மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. நடந்த சம்பவத்திற்கு இதுவரை எந்த அதிகாரிகளும் வருந்தவில்லை. அவர்களுக்கு எதிராக கொலை வழக்கு தொடரப்பட வேண்டும். துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டது யார்?, யார் பொறுப்பேற்பார்கள்? என்று கேள்விகள் எழுப்பியதுடன் எதிர்மனுதாரர்களின் ஆட்சேப த்திற்கு பதில் அளிக்குமாறு மனுதாரர் ஹென்றி திபேனுக்கு உத்தரவிட்டு விசாரணையை ஜூலை 15 ஆம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.

இந்நிலையில் திங்களன்று இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, “இத்தனை ஆண்டுகளாக சி.பி.ஐ. விசாரணை நடந்தும் இந்த வழக்கில் பலன் இல்லாமல் உள்ளது. சி.பி.ஐ. விசாரணை சரி யில்லை. துப்பாக்கிச் சூடு சம்பவத்தை நியாய மாக விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்த இடத்தில் இருந்து தூரத்தில் உள்ள குடியிருப்பு பகுதிகளிலும் துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டுள்ளது. அப்படி இருக்க எந்த அதிகாரியும் தவறிழைக்கவில்லை என எப்படி அறிக்கை அளிக்க முடியும். சுதந்திரமான விசாரணை அமைப்பின் முடிவு கவலை அளிக்கும் வகை யில் உள்ளது. இந்த வழக்கின் விசாரணை சி.பி.ஐ. யின் கையாலாகாதனத்தை காட்டுவ தாகவும் உள்ளது. தூ த்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் கொல்லப்பட்டது முன்கூட்டியே திட்டமிட்ட தாக தெரிகிறது ஒரு தொழிலதிபர் விரும்பிய தால் துப்பாக்கி சூடு நடத்தி இருக்கிறார்கள். அதற்கு போலீசார் உடந்தையாக செயல்பட்டு இருக்கிறார்கள். இந்த வழக்கை பொறுத்தவரை அந்த கால கட்டத்தில் சில நபர்கள் மூலம் அரசு அதிகாரி கள் குறிப்பாக காவல் துறை சார்ந்த அதிகாரிகளின் சொத்துக்களின் மதிப்பு அதிகரித்து ள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனவே இதுகுறித்து லஞ்ச ஒழிப்பு காவல்துறை விசாரிக்க வேண்டும். அவர்களுடைய சொத்துகளை கணக்கிட வேண்டும். அந்த விவரங்களை நீதி மன்றத்தில் அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும்!” என உத்தரவிட்ட நீதிபதிகள் வழக்கை மேலும் இரண்டு வார காலத்திற்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டுள்ளனர்.

### விண்ணப்பித்த அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கல்!

# சொன்னதை மட்டும் அல்ல; சொல்லாததையும் செய்யும் சாதனை அரசு!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூலை 17 - விண்ணப்பித்த அனைத்து பெண்களுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசு, சொன்னதை மட்டுமல்ல; சொல்லாததையும் செய்யும் சாதனை அரசாக உள்ளதாக ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 16.07.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:



தினகரன்

சாதனை அரசு

ஆட்சிக்கு வந்ததும், விடியல் பயணத் திட்டம், கொரோனா நிவாரண உதவித்தொகை ரூ.4,000ம் வழங்கும் திட்டம், முதல்வரின் முகவரித்துறை உருவாக்கும் திட்டம் என 5 திட்டங்களுக்கு முதல் கையெழுத்தை மு.க. ஸ்டாலின் போட்டார். தொடர்ந்து ஆவடி, தாம்பரம் புதிய காவல் ஆணையரகங்கள், போலீசாருக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை, மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2 ஆயிரம் மாதாந்திர உதவித்தொகை என அறிவிக்கப்பட்டது. ஆசிய அளவிலேயே பெரியதாக மதுரையில் ரூ.114 கோடியில் உயர் தொழில்நுட்பத்துடன் கலைஞர் நூலகம் அமைக்கப்பட்டது. வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை முதன்முறையாக அறிமுகமானது.

கூட்டுறவு நிறுவனங்களில் 5 பவுனுக்குள் நகைக்கடன் பெற்று நிலுவையில் இருந்த ரூ.4818.88 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது. ரூ.2755.99 கோடி மகளிர் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடியானது. சார்பதிவாளர் அலுவலகங்கள் சனிக்கிழமையும் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது. மகளிருக்கு கட்டணமில்லாத இலவச பேருந்து சேவை என்பது ஏழை பெண்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. தேர்வாணையத்தின் அனைத்து தேர்வுகளிலும் தமிழ் மொழி தகுதித்தேர்வு கட்டாயமாக்கப்பட்டது. இல்லம் தேடி கல்வித் திட்டம் தொடங்கப்பட்டது. இது போன்று இன்னும் ஏராளமான திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

தற்போது அனைத்து அரசு தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு கடந்த 2022ம் ஆண்டு முதல்வரின் காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டது. தற்போது இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு 3,995 அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 2 லட்சத்து 29 ஆயிரத்து 539 குழந்தைகள் பயனடைகின்றனர். அந்த வரிசையில் பெண்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் வகையில் தமிழக அரசு சார்பில் `கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’ தொடங்கப்பட்டது. இது பெண்கள் மத்தியில் பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்துக்கு 2024-25ம் நிதியாண்டில் ரூ.13,722 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலமாக, மாநிலம் முழுவதும் 1.13 கோடி பயனாளிகளுக்கு ஒவ்வொரு மாதமும் அவர்களது வங்கிக்கணக்கில் ரூ.1,000 செலுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்த திட்டத்தில் விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டவர்கள் மேல்முறையீடு செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. இந்நிலையில் தமிழகத்தில் மகளிர் உரிமைத்தொகைக்கு மேல்முறையீடு செய்த மேலும் 1.48 லட்சம் மகளிருக்கு ரூ.1,000 உரிமைத் தொகை கிடைக்கும் என்று சட்டசபையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பம் நிராகரிக்க ப்பட்டவர்கள் 30 நாட்களுக்குள் இ-சேவை மையம் மூலம் மேல்முறையீடு செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. இத்திட்டத்தில் பயனடையும் வகையில், நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது சட்டசபையின் மானிய கோரிக்கை தொடர்பான விவாதங்களின் போது மகளிர் உரிமைத்தொகை திட்டம் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 1.48 லட்சம் மகளிருக்கு உரிமைத்தொகை வரவு வைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் மேலும் 1.48 லட்சம் பேருக்கு ரூ.1,000 உரிமைத்தொகை வரவு வைக்கப்பட்டது. கடந்த மாதம் வரை 1 கோடியே 13 லட்சம் மகளிர் பயன்பெறும் நிலையில் உரிமைத்தொகை வழங்கப்பட்டது. தற்போது கூடுதலாக 1.48 லட்சம் மகளிருக்கு உரிமைத் தொகை நேற்று வழங்கப்பட்டது.

விண்ணப்பித்த அனைத்து பெண்களுக்கும் கிடைத்ததால் பெருமகிழ்ச்சி அடைந்தனர். இதனால் இந்த அரசு சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்யும் சாதனை அரசாக செயல்படுகிறது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு மின்சார

# ஒழுங்குமுறை ஆணையத் தலைவர் பதவி!

## விண்ணப்பங்கள் வரவேற்பு!

சென்னை, ஜூலை. 17 - மின்சாரச் சட்டம் 2003 ன் சட்டப் பிரிவுகளின் படி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒரு சட்டப்படியான ஆணையமாக தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாணையத்தில் 16.08.2024 முதல் தலைவர் பதவி காலியிடம் ஏற்படவுள்ளது.

இந்த பதவியினை நிரப்புவதற்காக சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி சி.டி.செல்வம் அவர்களின் தலைமையில் அரசு தலைமைச் செயலாளர் மற்றும் மத்திய மின்சார அதிகார அமைப்பின் தலைவர் ஆகியோரை உறுப்பினராகக் கொண்ட தேர்வுக் குழு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

15.07.2024 அன்று நடைபெற்ற தேர்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் தலைவர் பதவியினை நிரப்பு வதற்காக விண்ணப்பங்கள் 31.07.2024 அன்று மாலை 6.00 மணி வரை வரவேற்று நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், இது குறித்த விவரங்கள் இணையதள முகவரி https://www.tn.gov.in/department/7 ல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் தலைவர் பதவிக்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### திருவாரூரில் அரசு உதவி பெறும் பள்ளிகளில்

# விரிவாக்கப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட துவக்க விழா!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ .பங்கேற்பு!

திருவாரூர், ஜூலை 17 - உலகிற்கே முன்னோடியான தமிழ்நாட்டை உருவாக்கிய திராவிட நாயகர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சாதனை திட்டமான காலை உணவுத்திட்டம் முதலமைச்சர் அவர்களால் “ஊரக பகுதியில் அரசு உதவிபெறும் தொடக்கபள்ளிகளிலும் விரிவுப்படுத்தி திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து துவக்கி வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, திருவாரூர் மாவட்டம், திருவாரூர் வட்டம், தப்பளாம்புலியூர் ஊராட்சியில் ஸ்ரீ கிருஷ்ணா அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளியில் விரிவுப்படுத்தபட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடக்க விழாவில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், மாவட்ட ஆட்சித் தலைவர் சாருஶ்ரீ, நாடாளுமன்ற உறுப்பினர் வை. செல்வராஜ் ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா ஆகியோர் பங்கேற்றனர்.

முதலமைச்சர் அவர்கள், சட்டப்பேரவை விதி எண்.110ன் அறிவிப்பின் படி, அரசுப்பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவுத்திட்டம் அனைத்து மாவட்டங்களில் உள்ள அரசுப்பள்ளிகளில் துவங்கப்படும் என தெரிவிக்கப்பட்டதனை தொடர்ந்து கடந்த 15.09.2022 அன்று முதலமைச்சர் அவர்களால் கிராம மற்றும் நகர்புறங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் முதற்கட்டமாக 16 மாவட்டங்களில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் தொடங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அரசுப்பள்ளிகளில் கடந்த 25.08.2023 அன்று முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு திருவாரூர் மாவட்டத்தில் கிராமப்புற பகுதிகளில் 750 அரசுப்பள்ளிகளிலும், பேரூராட்சி பகுதிகளில் 27 அரசுப்பள்ளிகளிலும் என மொத்தமாக 777 பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

15.07.2024 அன்று முதலமைச்சர் அவர்களால் ஊரகப்பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவிபெறும் தொடக் கப்பள்ளி களிலும் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் தொடங்கி வைக்கப்படுகிறது. திருவாரூர் மாவட்டத்தில், 61 அரசு உதவிபெறும் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் தொடங்கப்பட்டு 4601 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுகின்றனர்.

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தினால் திருவாரூர் மாவட்டத்தில் ஊரகப்பகுதிகளில் 38,124 மாணவ, மாணவியர்களும், பேரூராட்சி பகுதிகளில் 1,980 மாணவ, மாணவியர்களும் என மொத்தமாக 838 பள்ளிகளில் பயிலும் 40,104 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுகின்றனர்.

காலை உணவுத்திட்டத்தின் சமையல் கூடங்களில் தொடர்புடைய ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதியினை சார்ந்த தேர்வு செய்யப்பட்ட மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் சமையல் கூட பொறுப்பாளர்களாக பணியில் ஈடுபடுகின்றனர்.

அரசுப்பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்கபடுத்திடவும், மாணவ, மாணவியர்கள் இடைநிற்றலை தடுத்திடவும், ஊட்டச்சத்து குறைபாடு இல்லா வருங்கால சந்ததி அமைத்திடவும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் பெரும் பங்கு வகிக்கிறது.

திருவாரூர் வட்டம், தப்பளாம்புலியூர் ஊராட்சியில் ஸ்ரீ கிருஷ்ணா அரசு உதவிபெறும் நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவு திட்டத்தை தொடங்கி அவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் எழுதுபொருட்களை திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஶ்ரீ, நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வ ராஜ் ஒன்றியக் குழு தலைவர் புலிவலம் .எ.தேவா ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில் நகர செயலாளர் வாரை.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், தப்பளாம்புலியூர் ஊராட்சி மன்றத்தலைவர் கணேசமூர்த்தி, ஒன்றியக்குழு உறுப்பினர் நட ராஜன் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வெலக்கல்நத்தம், மல்லப்பள்ளி, பணியான்டப்பள்ளி ஆகிய ஊராட்சிகளில் உள்ள பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெறும் ஊரகப் பகுதிகளில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தை மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஒன்றியக்குழு தலைவர் சத்யா, ஒன்றியச் செயலாளர் கே.சதிஷ்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் துரை, செயற்பொறியாளர் பாஷா முகமது, மாவட்ட கவுன்சிலர் ஜெயா சுந்தரேசன், ராமன், புரட்சிசந்திரன், சுந்தரம், சிகாமணி, சீனிவாசன், சின்னதம்பி, ஏசான் செரிப் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா ராஜகம்பீரம் புனித மரியன்னை தொடக்கப்பள்ளியில் தமிழக முதல்வரின் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிக்கான காலை உணவுத் திட்டத்தினை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மானாமதுரை ஒன்றியக்குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, மானாமதுரை மேற்கு ஒன்றியச் செயலாளர் எம்.அண்ணாதுரை, ஊராட்சி மன்றத் தலைவர் முஜிபூர் ரகுமான், காஜாமுகைதீன், மரு.சாகுபர்சாதிக்,, முருகன், ஆரோக்கியசாமி, அழகர், மற்றும் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.